1984 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக எப்படிப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விவரங்கள் தான் என்னிடத்தில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு கேள்வியினை போட்டால் அந்தப் பகுதியிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை விவரமாக தெரிவிக்க இயலும்.

மருங்காபுரி ஒன்றியம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு சோளீஸ்வரர் சிவன் கோயில்

5—(*வினா எண் 17794) திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா மருங்காபுரி ஒன்றியம் கோவில்பட்டியில் உள்ள சோளீஸ்வரர் சிவன் கோவில் பழுதடைந்து சீர்கெட்ட நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): இத்திருக் கோயில் சுவாமி மற்றும் அம்மன் சன்னதிகள் பழுதடைந்துள்ளன. திருப்பணி மேற்கொள்ள திருக்கோயிலின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லை. திருக்கோயிலை நிர்வகிக்கும் பரம்பரை அறங்காவலரும் திருப்பணி நடக்க யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. எனினும் திருப்பணி நடக்கும் வாய்ப்பு குறித்து துரித நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலானது மிகவும் தொன்மை வாய்ந்த கோவில். இதன் தொன்மையைக் காப்பாற்றும் வகையில் அரசு தீவிர முயற்சி எடுத்து, அந்தக்கோவிலை புதுப்பிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த கோவில் என்றால், மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள், முயற்சி எடுத்து, மக்களுடைய துணையோடு இந்தத் திருப்பணிக் காரியங்களிலே ஈடுபடவேண்டும். இல்லையானால், அதிலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற பரம்பரை அறங்காவலர் முயற்சி எடுக்கவேண்டும். அப்படி பொதுமக்கள் முயற்சி எடுத்தால், அதற்கு அறநிலையத் துறை துணையாக இருக்கும்.

திரு. மே. அ. இராசகுமார். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலில் வேலை செய்யும் அர்ச்சகர்கள் போதிய வருவாய் இல்லாமல், கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவியாகப் போதிய மான்யம் அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். தலைவரவர்களே, இந்த ஆலயம் என்பது ஒரு தனியான நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு ஆலயம் அல்ல. ஒரு 6, 7 ஆலயங்கள் இணைந்த ஒரு ஆலயத்திற்குள்ளே இருக்கிறது, ஒரு துணை ஆலயமாக இருக்கிறது. ஆலயங்கள் அனைத்திற்குமே சேர்ந்து வருடத்திற்கு ரூ. 22,658 தான் வருமானம் வருகிறது என்று தெரிகிறது. ஆகவே இந்த வருமானத்திற்குள்ளேதான் அந்த 6, 7 ஆலயங்களுடைய நிர்வாகமும் நடைபெற வேண்டியிருக்கிறது. அந்த வருமானத்தை வைத்துத்தான் அந்தப் பணியாளர்களுக்கு அல்லது அர்ச்சகர்களுக்கு ஊதியம் போன்ற சம்பளப் பட்டுவாடாக்கள், அல்லது படித்தரங்கள் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் அதைப் பரிசீலிக்கமுடியும்.

பாம்புத் தோல் ஏற்றுமதிக்கான தடை.

6 (*வினா எண் 18168) திரு. பாபு ஜனார்தனன். மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்புத்தோல் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடையாக சட்டங்கள் போட்டிருப்பது உண்மையா?

(ஆ) அதுகுறித்து மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு கடிதம் எழுதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெருவாரியாக பாம்பைக் கொன்று தோலை ஏற்றுமதி செய்கிறார்கள். பத்திரிக்கைகளில் படிக்கும்போது பாம்புத் தோலைவிட பாம்பு விஷத்தை ஏற்றுமதி செய்தால் அதிக பணம் கிடைக்குமென்று செய்திகள் வருகின்றன. அந்தப்பாம்பைப் பிடித்து, கொன்று, தோல் எடுத்து சம்பாதிப்பதை விட விஷம் எடுத்தால் அதிக பணம் கிடைக்கும். இப்படிப்பட்ட காரியத்தை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். துணைத் தலைவரவர்களே, பாம்பைக் கொல்வது அல்லது விஷம் எடுப்பதற்காக அவைகளைத் துன்புறுத்திக் கொல்வதில் ஈடுபடுகிற முயற்சி எல்லாம் இப்போது கடுமையான குற்றங்கள் எனக் கருதப் பட்டு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பாம்பைக் கொல்லாமலேயே அதனுடைய விஷத்தை எடுக்கின்ற சில முயற்சிகள் அரசினிடத்திலே எழுதி அனுமதி